Registered as a Newspaper

வாடிக்கையாளரின் நன்மைகருதி இடம் மாற்றம் செய்யப்படவுள்ளது
வி.ரி. அன்சன்ஸ்
பல்வைத்தியரும் கண் பரிசோதகரும்
317, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(B.M.C க்கு அருகாமையில்)
முகாமையாளர்: Dr. றெஜி சொலமன்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-50

Address being changed to the facilities of our customers.
V.T & SONS
QUALIFIED OPTICIANS and DENTIST
317, CLOCK TOWER ROAD, JAFFNA.
(ADJOINING B.M.C)
Manager: Dr. REGI SOLAMAN

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு மாசி மீ 27 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 றஜபு பிறை 20 (10 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 24

## மாகாண சபைத் தேர்தல் ஏப். 28 இல்

# 3 கட்சிகள் மட்டுமே தேர்தலில் போட்டி

### புதிய முஸ்லிம் காங்கிரஸும் வேட்பாளர்களை நிறுத்தியது

கொழும்பு, மார்ச் 10

நான்கு மாகாண சபைகளுக்கான தேர்தலில் மூன்று அரசியற் கட்சிகள் மட்டுமே போட்டியிடுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய சோஷலிச முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவையே வேட்பாளர்களைப் போட்டிக்கு நிறுத்தி உள்ளன.

வடமத்தி, வடமேற்கு சப்ரகமுவ, ஊவா மாகாண சபைகளுக்கான தேர்தல் அடுத்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபைக்கான தேர்தலும், மேற்கு, தெற்கு மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் காலவரையறையின்றி ஒத்திப்போடப்பட்டது தெரிந்ததே.

நான்கு மாகாணசபைகளுக்குமான தேர்தல் அடுத்த மாதம் 28ஆம் திகதி நடைபெறும்.

காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்களிப்பு இடம்பெறும்.

வடமேற்கு, வடமத்தி, சப்ரகமுவா, ஊவா மாகாண சபைகளின் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் நேற்றுத் தாக்கல்செய்யப்பட்டன.

ஐ. தே. க., ஐக்கிய சோஷலிச முன்னணி ஆகியன நான்குமாகாண சபைத் தேர்தல்களிலும் போட்டியிடுகின்றன.

புதிதாக அரசியற் கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சப்ரகமுவா, வடமேற்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றது.

குருநாகல், புத்தளம் மாவட்டங்களைக் கொண்ட வடமேற்கு மாகாண சபையில் 50 உறுப்பினர்களும்,

அனுராதபுரம், பொலன்னறுவ மாவட்டங்களைக் கொண்ட வடமத்திய மாகாண சபையில் 31 உறுப்பினர்களும்,

பதுளை, மொனராகலை மாவட்டங்களைக் கொண்ட ஊவா மாகாண சபையில் 32 உறுப்பினர்களும்,

இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களைக் கொண்ட சப்ரகமுவா மாகாண சபைக்கு 42 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவர். (இ-எ)

### 58 பேர் விடுதலை

வடமராட்சி, மார்ச் 10

இந்திய அமைதிப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 58 பேர் கடந்த திங்கட்கிழமை பலாலியில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் மூவர் பெண்கள்.

எஸ். பாலசுந்தரம் [காங்கேசன்துறைபிரசைகள் குழுச் செயலாளர்] வி. இரத்தினராசா [பயிலிட்டி பிரசைகள் (4-ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மருத்துவ பீடம் மூடப்படமாட்டாது

#### டாக்டர் கல்பகே தகவல்

கொழும்பு, மார்ச் 10

யாழ் மருத்துவபீடம் மூடப்படமாட்டாது.

பல்கலைக்கழக மானியக் கமிஷன் தலைவர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

டாக்டர் கல்பகே மேலும்சொன்னதாவது;

மூடும் எண்ணம் ஏதும் இல்லை.

உண்மையில் யாழ். வைத்திய பீடத்தை இயங்க வைப்பதில்தான் நாம் ஈடுபட்டிருக்கின்றோம்.

யாழ் ஆஸ்பத்திரியில் வேலைசெய்வதற்கு டாக்டர்களைக் கண்டுபிடிப்பதே தற்போதுள்ள நெருக்கடி. வைத்திய பீடத்திலும் அதிகாரிகளுக்குத் தட்டுப்பாடு உண்டு.

தேவையான டாக்டர்களையும் ஊழியர்களையும் கண்டுபிடிப்பதில் நாம் ஈடுபட்டுள்ளோம். போதனா ஆஸ்பத்திரியின் உதவியை நாடியிருக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 5 வைத்திய மாணவர்கள் என்னுடன் இருக்கின்றனர். யாழ். பல்கலைக்கழக உபவேந்தரும் இங்கு இருக்கின்றார்.

இப்படி டாக்டர் கல்பகே சொன்னார் (இ-எ)

### லஞ்சம் எனக் கூறி சபைக்கு வந்த 5 லட்சம் ரூபா!

புதுடில்லி, மார்ச் 10

கட்சி மாறுவதற்காக ஜெயலலிதா அணியினால் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் 5 லட்சம் ரூபா பணத்தை அ. தி. மு. க. எம். பி திரு தங்கராசு புதுடில்லி நாடாளுமன்றத்தில [லோகசபையில] நேற்றுக் காண்பித்தார்.

இதனால் அவையில் பரபரப்பு ஏற்பட்டது.

தங்கராசு எம் பி பெட்டியில் இருந்து 100 ரூபா நோட்டுக்களை, சபாநாயகர் முன்னிலையில் வைத்தார். பணத்தைத் தொடமாட்டேன் என்று சபாநாயகர் பல்ராம் ஜாக்கர் சொன்னார்.

ஜானகி அணியில் இருந்து வெளியேறுவதற்காக இந்தப் பணத்தை ஜெயலலிதா தந்தார் என்று தங்கராசு எம். பி. சபையில் குறிப்பிட்டார்.

ஜெயலலிதா அணித்தலைவர் திரு. குழந்தைவேலு குற்றச்சாட்டை மறுத்தார்.

சபாநாயகர் அனுமதியுடன நாடாளுமன்றப் பாதுகாப்பு அதிகாரியின் பாதுகாப்புடன் திரு. தங்கராசு, 5 லட்சம் ரூபா பணத்தை அருகில் உள்ள காவல் நிலையத்தில் கொண்டுபோய் ஒப்படைத்தார்

### மின்சாரம், நீர்விநியோகம், சுகாதார சேவை வழமைபோல்

# வாரத்தில் 2 நாட்கள்

## யாழ். மாநகரசபை அலுவல்கள் நடைபெற மாட்டா

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். மாநகர சபையின் அலுவலகப் பகுதிகள் செவ்வாய் கிழமைகளிலும் வியாழக்கிழமைகளிலும் இயங்கமாட்டா எனத் தெரியவருகிறது.

இன்றைய வியாழக்கிழமை மாநகர சபையில் அலுவலகப் பகுதிகள் இயங்கமாட்டா எனவும் மின்சாரம், நீர் விநியோகம் சுகாதாரசேவை போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டு அவை வழமைபோல் இயங்கும் எனவும் கூறப்பட்டது.

...வின் நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் மற்றொரு கட்டமே இது எனவும் அறிய வருகிறது.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் மாநகரசபை அலுவலகங்கள் யாவும் வழமைபோல் இயங்கும்.

இதேவேளை அரசாங்க அலுவலகங்கள் இயங்கக் கூடாது என முன்னர் அறிவிக்கப்பட்டதில் இதுவரை எவ்வித தளர்வும் இல்லை எனவும் சொல்லப்படுகிறது. (ஒ-10)

### தர்மபுரம், வட்டக்கச்சி பகுதிகளில் தேடுதல்

கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இடங்களிலிருந்து தரை மார்க்கமாகவும், ஹெலிகொப்டர் மூலமும் தர்மபுரம், கல்மடு, வட்டக்கச்சி ஆகிய பகுதிகளுக்குச் சென்ற இந்திய அமைதிப்படை அங்கு தொடர்ந்து சில நாட்களாகத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இத்தேடுதல் நடவடிக்கையினால் அப்பகுதிகளுக்கான தொடர்புகள் கடந்த சில நாட்களாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

இத்தேடுதலில் முதல் நாளான சனிக்கிழமை இடம்பெற்றதுப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கல்மடுவிலிருந்த கிளிநொச்சிப் பாடசாலைக்கு வந்த மாணவன் காயமடைந்தான்.

கிளிநொச்சியைச் சேர்ந்த வைத்திலிங்கம் கனகராசா என்ற 18 வயது மாணவனே காயமடைந்தவர்.

இவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அங்கிருந்து யாழ் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் [ஒ-76]

### முச்சந்தி முரளி



மாகாண சபைத் தேர்தலைப் பற்றி ஆசாங்கம் அடிச்ச கிலுகிலுப்பைக்குச் சரியான பெறு பேறுயைத் தெரியயில்லையே.

### ஜே. வி. பி. ஆதரவுடன் சிறிமா ஆட்சிக்கு வந்தால்...

கொழும்பு மார்ச் 10

ஜே வி பி யின் ஆதரவுடன் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பதவிக்கு வரின் 24 மணித்தியாலங்களுக்குக் கூட அவரினால் ஆட்சியை நடத்த முடியாத நிலை தான் ஏற்படும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன மேற்கண்டவாறு சொன்னார்.

குருனாகலில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் திரு ஜயவர்த்தன பேலும் சொன்னதாவது;

ஜே.வி.பி யின் ஆதரவுடன் பதவி பெறலாம் என்று சிறிமாவோவும் அனுரவும் முயற்சிக்கின்றனர்

முட்டாள்தனமான அரசியலை நடத்துவதில் அப்பாவும் மகனும் அக்கறையாக உள்ளனர்

இப்படி திரு. ஜெயவர்த்தன சொன்னார். [ஒ-எ]

### சனிக்கிழமை மீண்டும் அன்னையர் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். அன்னையர் முன்னணியினர் எதிர்வரும் சனி கிழமை மீண்டும் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொள்ள உள்ளனர்.

கடந்த சனியன்று ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தபோதிலும் தகுந்த பலாபலன்கள் இதுவரை கிடைக்கவில்லை என அன்னையர் முன்னணியினர் தெரிவித்தனர்.

அதனாலேயே தாம் திரும்பவும் உண்ணாவிரதத்தை மேற்கொள்ளப் போவதாக அவர்கள் தெரிவித்தனர்.

சனியன்று அனுஷ்டிக்க உள்ள உண்ணாவிரதப் போராட்டத்தில் சகல பொது மக்களையும் கலந்து கொள்ளுமாறும் அன்னையர் முன்னணியினர் அழைப்பு விடுத்துள்ளனர்

காலை 7 மணிக்கு நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலய முன்றலில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும். (ஒ-9)

### சுபநேரம்

10-03 1988
மாசி 27
வியாழக்கிழமை
சுபநேரம்: 7 53 முதல் 9-23 வரை
ராகுகாலம்: 1-53 முதல் 3-23 வரை
இவை பலுக்கும் இரவு குளிகை நேரத்தும்.
இரவு 1-02 க்கு மேல் அட்டமி.

# யாழ். நகரில் 3,000 பேர்

## வாந்திபேதியினால் மறைமுக பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ் மாநகரப் பகுதியில் வாந்திபேதி நோய் மிக வேகமாகப் பரவிவருகிறது.

மூன்று பேர் மரணமாகி உள்ளனர் என்றும் 29 பேர் வரையில் இந் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை, ஒரு நோயாளிக்கு குறைந்தது 75 முதல் 100 பேர் வரையில் மறைமுக நோயாளிகள் இருக்கக்கூடும் என்று தொற்றுநோயியலாளர்கள் அச்சம் தெரிவித்திருக்கிறார்கள்.

இதன்படி யாழ் மாநகரப் பகுதியில் 3,000 பேர் வரையில் இந் நோயினால் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டிருக்கலாம் என சுகாதாரப் பகுதிகளில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது

இது தொடர்பாக யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சி வி கே சிவஞானம் விடுத்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

யாழ் மாநகரப் பிரதேசத்தில் வாந்திபேதி என்னும் நோய் அசுர வேகத்தில் பரவி வருகின்றது.

குருநகரில் 6 பேரும், இடடியில் 5 பேரும், துண்டியில் 9 பேரும், கந்தர்மடத்தில் ஒருவரும் நல்லூரில் ஒருவரும், நாச்சிமார் கோவிலடியில் ஒருவரும், பாஷையூரில் 2 பேரும், நாவாந்துறையில் 2 பேரும், மடம் வீதியில் ஒருவரும், ஸ்ரேசன் வட்டாரத்தில் ஒருவரும மொத்தம 29 பேர் இந் நோயினால (4-ஆம் பக்கம் பார்க்க)

### இன்று இறுதிச்சடங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 10

கடந்த செவ்வாயன்று அகால மரணமடைந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டச் செயலாளரும தொழிற் சங்க பிரமுகருமான திரு. விஜயானந்தனின் பூதவுடல அன்னாரின் கந்தரோடை இல்லத்திலிருந்து இன்று காலை 10 மணிக்கு கந்தரோடை சுடலைப் புலவு மயானத்திற்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். [ஆ-9]

### டியூவும் பாலகுமாரும் அஞ்சலி

கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேச செயலாளரான திரு எஸ் விஜயானந்தனின் பூதவுடலுக்கு கலவானத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு டியூ குணசேகரா (டியூ) நேற்று அஞ்சலி செலுத்தினார்.

இதேவேளை ஈரோஸ் பிரமுகர் திரு. வேலுப்பிள்ளை பாலகுமாரும் அமரர் விஜயானந்தனின் பூதவுடலுக்கு நேற்று அஞ்சலி செலுத்தினர். [ஒ-10]

### பெற்றோல் உச்ச விலையில்

யாழ்ப்பாணம், மார்ச்10

யாழ்நகரில் பெற்றோலின் விலை மேலும் அதிகரித்துள்ளது.

நேற்று ஒரு போத்தல் பெற்றோல் முப்பது ரூபாவாக நகரில் விற்பனை செய்யப்பட்டது. (ஒ-10)

### அஹிம்சை வழியில் செல்லுங்கள்

#### இளைஞருக்கு லலித் புத்திமதி

கொழும்பு, மார்ச் 10

அநீதியைக் களைய அஹிம்சை வழியில் செல்லுங்கள். இதுவே இளைஞர்களுக்கு நான் கூறும் புத்திமதி.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி பலாங்கொடையில் கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

இன்றைய ஜனநாயக முறை நூறு சதவீதம் திருப்தியானதல்ல.

அதில் உள்ள குறைகளைத் திருத்த நாம் அஹிம்சை வழியில் பாடுபட வேண்டும்.

இன்று நாம் அபாயகரமான நிலையில் உள்ளோம். நாட்டுக்கு இன்று சவால் விடப்பட்டு உளளது. அச்சவாலை வெற்றிகரமாகச் சமாளிக்க வேண்டும். சமாளிப்போம் என்ற திடசித்தம் எம்மிடம் உண்டு.

இப்படி அமைச்சர் சொன்னார். (இ-எ)

### ஐ. தே. கவிலிருந்து மேலும் பலர் விலகுவர்

#### சிறிமா சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 10

ரோனி டி மெல், காமினி ஜயசூரியா போன்று இன்னும் பலர் ஐ தே க அரசிலிருந்து விரைவில் வெளியேறுவர்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முன்கண்டவாறு அருட்டம் தெரிவித்தார்.

காலி நகர மண்டபத்தில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் பேசினார்.

மேலும்அவர் சொன்னதாவது;

பொதுத் தேர்தலை இப்போது தேவை பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கவே ஜனாதிபதி விரும்புகின்றார்.

மக்கள் முன் செல்ல (4ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ் சிறைக்கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதம்

வெலிக்கடைச் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளில ஒரு பிரிவினர் இம் மாதம் 17ஆம் திகதி முதல் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகத் தீர்மானித்திருக்கின்றனர்.

சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை இம் மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்காவிட்டால் இந்த உண்ணாவிரதம் ஆரம்பமாகும என்று அறிவிக்கப்பட்டுள்ளது

சென்ற மாதம் 26ஆம் திகதியில் இருந்து தமிழ்க் கைதிகள் சுழற்சி முறையில உண்ணாவிரதமிருந்து வருகின்றனர்.

சென்ற 17ஆம் திகதி நடத்தப்பட்ட அடையாள உண்ணாவிரதம் பலனளிக்காததைத் தொடர்ந்தே, சுழற்சி முறையிலான உண்ணா (4ஆம பக்கம் பார்க்க)

### ஈரோஸ் அனுதாபம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

திரு. விஜயானந்தனின் மரணம் குறித்து ஈரோஸ் அதிர்ச்சியும் வேதனையும் தெரிவித்துள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

செல்லிப் பளை கிழக்கு, துர்க்காதேவி ஆலயத்திற்கு அண்மையாக புகையிரத வீதி ஓரமாக புதிய சகல வசதிகளுமுள்ள 16½ பரப்பு வீடு வளவு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ஹொட்டல் றெலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், [2003]

1 யாழ்ப்பாணம், சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் சகல வசதிகளுடன் 3 அறைகள் கொண்ட புதிய வீடு.
2 யாழ். அரியாலை யூசுா கோவிலடிக்கு அண்மையில் 10 பரப்பு தென்னங்காணி. விவரம் J. P T. ltd 3, நவீன சந்தை (மேல் மாடி) யாழ்ப்பாணம். (1876)

C E D - V 100 E Sony Video 8 Pro புதிய ரகம் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவா ஸ்ரோர்ஸ், 475, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (1600)

வட்டுக்கோட்டை அற்கின்சன் வீதிக்கருகாமையில் "உடலை" என்னும் நெற்காணி 5 பரப்பு விற்பனைக்குண்டு தொடர்பு: திரு. து பாக்கியநாதன், சட்டத்தரணி, மாவடி, வட்டுக்கோட்டை, (1875)

நாஷனல் 300, 370, 7000 J. V. C. Akai வீடியோ செட் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி, [றெயில்வே கடவையருகாமை] யாழ்ப்பாணம். (1860)

Hi-ex, Hy - Line, Golden Comet கோட்டுக் குஞ்சுகள். சேவற் குஞ்சுகள் 11 ஆம் திகதி வெள்ளி கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில் (1858)

ஒரு நாள் வைறலைன் கோழிக்குஞ்சுகள் 15 ம் திகதி விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். தொடர்புகொள்க. சிமாட்டி பாம்ஸ், மைலன் காடு, சுன்னாகம் (18:9)

### தேவை

சைவ உணவகத்திற்கு சர்வர், மேற்பார்வையாளர் தேவை. தொடர்பு கொள்க 404, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (1835)

றேடியோ, ரிவி திருத்துவதில் அனுபவம் உள்ளவர் தேவை. தொடர்பு கொள்க 404, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (1835)

ஞாயிற்றுக்கிழமைகளும் முழு நேர விகிதர் தேவை. நேரில் சமூகமளிக்கவும். டில்கா வோச் வேர்க்ஸ், (பஸ் நிலையம் முன்பாக மேல் மாடி) யாழ்ப்பாணம். (1857)

எமது ஸ்தாபனத்திற்கு உதவி சமையல்காரரும் உதவியாளரும் உடன் தேவை. (Assistant Cook, and Helper) ஸ்ரான்லி சைனீஸ் றெஸ்ரோறன்ற் இல 60, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (1871)

### WANTED

A full Time Teacher for English Language in Year 9 to 11. Apply immediately to: Rector, St Patrick's College, Jaffna.

கம்பியூட்டர் (Computer) உடன் தேவை தொடர்பு கொள்ளவும் C/o/89 உதயன் 15,2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

### தேவை

(1) வெயிட்டர் 4 (ஆண்/ பெண்) (2) காசாளர், லிகிதர் 4 (ஆண் பெண்) (3) சமையல்காரர் 3(4) சமையல் (உதவியாளர்)5 Galaxy இல.30, கஸ்தூரியார் றோட் யாழ்ப்பாணம் (1883)

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி நவீன சந்தைக்கு அருகாமையில் 60அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்ட கடை ஒன்று உடன் வாடகைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பரம் இல;- 87 C/o உதயன். (1648)

### மணமகன் தேவை

வெளிநாட்டில் Master Degree (நிர்வாக துறை) படித்துக்கொண்டிருக்கின்ற வேளாளகுல றோமன் கத்தோலிக்க 33வயதுடைய 5' 3" உயரமுள்ள மணமகனுக்கு அழகுள்ள B Sc அல்லது B.Com. பட்டதாரி தேவை: இதற்கொத்த ஆங்கில தரதரம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். லீவில் வந்துள்ள மணமகனுடன் வெளிநாடு செல்லக் கூடியவர் மட்டுமே விண்ணப்பிக்கவும். c/o 84 உதயன்,15 2ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (1847)

### காணவில்லை

பிட்டம் நுவ. றேபேசி எஸ்டேட்டைச் சேர்ந்த பிச்சை ஜெயராமன் ஆகிய எனது அடையாள அட்டை கொழும்புத் துறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் "உதயன்" காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (1874

கொக்குவில் பல்தொழில் நுட்ட நிறுவனத்துக்கும் சுதுமலை, ஆனைக்கோட்டை வீதிக்கும், யாழ். காரை வீதிக்கும் இடையில் எனது கைச்செயின் (பவுண்) தொலைந்து விட்டது கண்டெடுத்துக் கருபவர்களுக்குத்தகுந்த சன்மானம்வழங்கப் படும். 18. மத்தியூஸ்வீதி. (பெரிய கோயில். பின்பாக) யாழ்ப்பாணம் [1890]

சனசசை கேதீஸ்வரநாதன் மீரா வோடை தமிழ் வாழைச்சேனை என்னும் விலாசமிடப்பட்ட, எனது 61230116 இல அடையாள அட்டையும் அருணா ஜுவலர்ஸ் விசிட்டிங் காட்டும் 5 3 88 இல் 2ஆம் குறுக்கு வீதிக்கும் ஆஸ்பத்திரி பின் வீதிக்கும் இடையில்தவறிவிட்டது தயவு செய்து கண்டெடுத்தவர்கள்அருணா ஜுவலர்சிலோ உதயன் காரியாலயத்திலோ ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். [1887]

### தவிறிவிட்டது

வயோதிபரான எனது மூக்குக் கண்ணாடி 7 3. 88 அன்று பிறவுண் றோட் சந்திக்கும் பெருமாள் கோவில் சந்திக்கும் இடையில் காலை 10 மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'உதயன்' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2008)

---

# பிரயாண ஒழுங்குகள்

## ★ சவூதி

கூலியாட்கள் தேவை
(Labourers)

பிரயாணம் வெகுவிரைவில்!
முற்பணம் அறவிடப்படமாட்டாது

## ★ குவைத்

வீட்டுப் பணிப்பெண்கள் (House maids)
வயது: 18 முதல் 30 வரை

## ★ சிங்கப்பூர்

வீட்டுப் பணிப்பெண்கள் (House maids)

## ★ சவூதி அரேபியா

வீட்டுப் பணிப்பெண்கள்
வயது 30 முதல் 38 வரை

மேலதிக விவரங்களுக்கு எமது காரியாலயத்துடன் 18-03 88க்கு முன் காலை8-30 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

## யுனைற்றட் இன்ரநஷனல் ஏஜன்சி

666, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமை

---

# JAFFNA ENGLISH ACADEMY

[A LUX IN TENEBRIS]

## TOEFL

A new batch commencing on 14th March.

Lectures on Mondays, Wednesdays 9 to 11 a m.

Duration: 3 Months
Course Fee: Rs. 250/- only
Lectures: KANDIAH NAVARENDRAN

## ● HIGHER ENGLISH COURSE: (a crash course)

An integrated approach to the study of English encompassing the important aspects of English language and literature

**The Syllabus Comprises the following:**

(a) Shakespeare's Romeo & Juliet (original text)
(b) Bernard Shaw's Arms And The Man (original text)
(c) Charles Dickens's Hard Times (Original text)
(d) Essays and Letter Writing
(e) Precis and Comprehension
(f) Idioms and Proverbs
(g) Literary Criticism
(h) Poetry
(i) Vocabulary, Phonetics, Grammar etc. etc.

Duration: 4 months
Commencement - 5th March
Lectures on: Saturdays & Sundays 4-00 to 5-30 p m.
Course fee: Rs. 350/- only
Lectures: KANDIAH NAVARENDRAN

## ● SPOKEN ENGLISH: (a crash course)

வயது வந்தவர்களுக்கும் உத்தியோகம் பார்ப்பவர்களுக்கும்

Lectures on Tuesdays & Thursdays 4-00 to 5-30 p. m.
Commencement: 15th March
Course fee: Rs. 150 - only
Lectures: KANDIAH NAVARENDRAN

Lack of knowledge of spoken English leads to tragic linguistic accidents. We'll help you to avoid them Let not your future suffer owing to lack of spoken English. If you are ready for a move— take the first step in the right direction by coming to us.

9, முக்கா லேன், கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

---

## யாழ். - கொழும்பு விமான சேவை

பலாலிக்கு விசேஷ போக்குவரத்து வசதிகளுடன் ஒழுங்காக நடைபெறுகின்றது.

We are the only agents who are operating regular flights and permitted to handle Air Passengers at Palaly port.

Film roll Processing & Printing Accepted. Delivery within 3 days.

# MACK
## Communication & Travels

இல. 8, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

---

நவஜீவன புனருத்தாரண நிலையம்

## தொழில் நுட்பப் பயிற்சி

### வகுப்புக்கள்

1. அடிப்படைப் பொறியியல்
2. கடைச்சல் இயந்திரம் (Lathe Machine)
3. ஒட்டுநர்:
   I. மின்சார ஒட்டுநர் (Arc Welding)
   II. வாயு ஒட்டுநர் (Gas Welding)

மேற்குறிப்பிட்ட பயிற்சிகள் அனைத்தும் இணைத்தே வழங்கப்படும்.

பயிற்சிக் காலம்: ஒரு வருட முழு நேரம்.
கல்வித் தராதரம்: க பொ.த (சா/த) இல் கணிதம் உட்பட 5 பாடங்களில் சாதாரண சித்தி.
வயதெல்லை: 16 — 22 வயது.
ஆரம்பம்: 01 - 04 - 1988
கட்டணம்: பயிற்சிக் கட்டணம் மாதாந்தம் 100/-

விண்ணப்பப் படிவங்கள் பங்குனி 19ஆம் திகதிக்கு முன் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

குறிப்பு: தங்குமிட உணவு வசதியும் உண்டு.

நிர்வாகி.
'நவஜீவனம்',பரந்தன். (1844)

---

## பிரயாண ஒழுங்குகள்

★ குவைத் ★ சவூதி அரேபியா

★ ஆஸ்பத்திரி கிளீனர்ஸ்
★ ஏயாப்போர்ட் கிளீனர்ஸ்
★ லேபரர்ஸ்

2 கிழமைக்குள் பிரயாணம்.
பாஸ்போட்,10 படம் போட்டோஸ்ரட் கொப்பி சகிதம் உடனே நேரில் வரவும்.
(M. இதபொன்கலன்)

இலங்கை மாதாலேன்
சில்லாலை கிழக்கு,
பண்டத்தரிப்பு.

FAZAVILLA
25/5 Central Road,
COLOMBO 12
T. No. 21963

(1880)

---

## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல நிறுவனமொன்றிற்கு நன்கு அனுபவமுள்ள பெண் உதவிக் கணக்காளர் உடனடியாகத் தேவை. ரைப்பிங் தெரிந்திருந்தால்முன்னுரிமை வழங்கப்படும். 20 - 03 - 88க்கு முன் விண்ணப்பிக்கவும்.

மே/பா உதயன்
15, 2ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
[1830]

---

## வெளிவந்துவிட்டது

பல மாத இடைவெளிக்குப் பின்
ஆசிரியர்: காமினி நவரெத்னாவின்

# சற்றடே றிவியூ
# SATURDAY REVIEW

தை மாத இதழாக வெளிவந்துள்ளது. எல்லாப் பிரபல பத்திரிகை விற்பனையாளரிடமும் கிடைக்கும்.
அன்பளிப்பு விலை: ரூபா 10/-

---

## பிரயாண ஒழுங்குகள்

### ★ குவைத்

| | | வயது |
|---|---|---|
| ★ HOUSE BOY | (Male) | 18 :0 |
| ★ HOUSE MAID | (Female) | 18 — 35 |

### ★ சிரியா Siriya

| | | |
|---|---|---|
| ★ LABOUR | (Male) | 18 — 30 |
| ★ HOUSE MAID | (Female) | 18 — 35 |

மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு உடன் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

விரும்புவோர் பாஸ்போட் மற்றும் புகைப் படத்துடன் உடன் தொடர்புகொள்ளவும்.

# AZRIKA
## Green Flag Travels & Tours

132, Point-Pedro Road,
3rd Mile Post,
Kalviankadu.
JAFFNA. (1649)

---

ஹாட்லிக் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்

முன்னாள் மாணவர்கள் தங்களுடைய முழுப்பெயர், தற்போதைய விலாசம், மாணவகால விலாசம், படித்தகாலம், படித்தவகுப்புகள்,சேவைக்கம்(நினைவிலிருந்தால்) போன்ற விபரங்களை இணைச்செயலாளர், ஹாட்லிக்கல்லூரி பழைய. மாணவர் சங்கம், ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு தெரியத்தரும்படி வேண்டுகிறோம்.

கல்லூரியின் 150 ம் ஆண்டு, இவ்வருடம் கொண்டாடப்பட இருப்பதால் தங்களது ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது. இவற்றை ஏனைய பழைய மாணவர்களுக்கும் தெரியப் படுத்துங்கள்.

குறிப்பு:-
சந்தாப்பணம்- வருடம் ரூபா 10/-
ஆயுள் காலம் ரூபா100/-

நன்றி
டி ஆர் அருளம்பநாயகம்
வி செல்வராசன்
இணைச்செயலாளர்.

ஹாட்லிக் கல்லூரி
பருத்தித்துறை.
(1855)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

# அரை நிரந்தரக் கட்டிடங்கள்

(Semi Permanent Structure)

## நிருமாணிப்பதற்கான கேள்வி கோரல்

மாணவர் தங்குமிடம், வகுப்பறைகள், மலசலகூட வசதிகள், கிணறுகள் உட்பட அரை நிரந்தரக் கட்டிடங்களை நிருமாணிப்பதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துடன் பதிவு செய்துள்ள ஒப்பந்தக் காரரிடமிருந்து கேள்விகளை கோர உயர் கல்வி அமைச்சு விரும்புகிறது.

கேள்விதாரர்கள் மேலே கூறப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள 14-3-88ஆம் திகதி மு. ப. 10 மணிக்கு முன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வேலைப் பொறியியலாளர் பகுதிக்கு வரவேண்டும்.

கேள்விப் பத்திரங்களைப் பெற மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 250/-ம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 750/-யையும் (பெற்றுக்கொண்ட சகல ஆவணங்களும் திரும்பப் பெறும்போது) செலுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து பெற்ற பற்றுச்சீட்டை வேலைப் பொறியாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் "செயலாளர். உயர்கல்வி அமைச்சு. இல. 18, வாட் பிளேஸ், கொழும்பு-7" என்ற முகவரிக்கு 31-3-88 வியாழக்கிழமை மு. ப. 10 மணிக்கு முன் அனுப்பவேண்டும்.

மேற்படி கேள்விப் பத்திரங்கள் அதே தினம் மு ப. 10-30 மணிக்கு அதே இடத்தில் திறக்கப்படும் பொழுது பிரசன்னமாயிருக்குமாறு கேள்விதாரர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

அடுத்தவர் இன்பத்தில் நாம் மகிழ்ந்து மற்றவர் துன்பத்தில் நாம் நெகிழ்ந்து ஏகமாக இருப்பதே இறையருள் பெறும் வழி.

— பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா


## உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:-292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805, 22073
யாழ்ப்பாணம்.
10.03.1988 த.பெ.இல:-23


## மன்சூருக்கு வந்த துணிச்சல்

கல்முனை எம்.பி. ஜனாப் ஏ.ஆர். மன்சூர் ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர். அரசாங்கத்தில் முக்கிய பதவிகளில் ஒன்றான மாவட்ட அமைச்சராகப் பணி புரிகிறார்.

எனினும் அவர் இலங்கையின் சிறுபான்மை இனங்களில் ஒன்றான முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர் கிழக்கு மாகாணம் அவரது தாயகம். மற்றொரு சிறுபான்மை இனமான தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் முல்லைத்தீவின் மாவட்ட அமைச்சர்.

ஆகையால் அவருக்கு ஆளுங்கட்சியின் நோக்கும், போக்கும், வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் கஷ்டங்களும் நன்கு தெரிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக ஆளுங்கட்சியில் தொடர்ந்து அங்கம் வகித்து வருவதால், அரசாங்கம், சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் மக்களை எப்படி நடத்த வேண்டும் என உள்ளார்ந்தமாக நினைக்கிறது. விரும்புகிறது என்பதை அவர் நன்றாகக் கிரகித்துக் கொண்டிருப்பார்

சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களையும், முஸ்லிம்களையும் தங்களுக்குச் சமமானவர்களாக சிங்கள மக்களும் அவர்களின் தலைவர்களும் ஏற்க வேண்டும்—

இந்த உண்மையை அவர்கள் இனியும் ஏற்று நடக்க மறுத்தால் நாடு பிளவுபடுவதை எவராலும் தடுக்க முடியாது —

இந்த நாட்டில் சிறுபான்மை இனத்தவர்களும் உரிமைகளுடனும், சமத்துவத்துடனும் வாழ வேண்டும். இல்லையேல் இந்த நாட்டு மக்கள் எவருமே நிம்மதியுடன் வாழ முடியாது — இவ்வாறு ஜனாப் மன்சூர் மிகத் துணிச்சலுடன் எடுத்துக் கூறியிருக்கிறார். அத்தனையும் அர்த்தம் நிறைந்தவை.

ஆளும் கட்சியில் அங்கம் வகிப்பதால் ஏற்பட்ட அனுபவங்களாலும், உள்ளத்தில் ஏற்பட்ட உறுத்தல்களாலும் அவர் உண்மை நிலையை எடுத்துச் செல்லத் துணிந்தார் என்றே நாம் கருத வேண்டி உள்ளது.

சிறுபான்மை மக்களின் உரிமைகளை வழங்காமலும், அவர்களைத் தமக்குச் சமமாக அன்றி கீழ் மட்டத்தில் வைத்து நடத்தவும் சிறு சலுகைகளை மட்டும் வழங்கி உலகத்தை ஏமாற்றவும் —

சிங்களத் தலைவர்கள் திட்டமிட்டுச் செயலாற்றி வருவது கண்டு ஜனாப் மன்சூரின் உள்ளம் வெதும்புகிறது. உள்ளத்தில் உள்ளவை உதட்டில் உதிர்ந்திருக்கின்றன.

இவை சிங்களப்பேரினவாதிகள் காதுகளில் விழுமா? அவர்கள் உள்ளத்தைத் தொடுமா? இல்லையேல் தாங்கள் திட்டமிடுவதைச் செய்து கொண்டு, சிறுபான்மை மக்களை அடக்கி ஒடுக்க தொடர்ந்தும் முயற்சித்து நாடு பிளவுபட அனுமதிப்பார்களா? அல்லது செய்வதையும் செய்து கொண்டு வெளியார் உதவியுடன் நாடு பிளவுபடுவதைத் தடுத்துவிடலாம் என்று கணக்குப் போடுவார்களோ?

எதற்கும் காலம் தான் பதில் சொல்லும்; நாமல்ல.

## நடு நிலைமையாளர்கள் விமர்சனம்செய்ய முடியாதநிலை

### ஆய்வரங்கில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 10

நடு நிலைமையாளர்கள் மிக அண்மைக் காலங்களில் எது பற்றியும் விமர்சனம் செய்ய முடியாதவர்களாக உள்ளனர். இதனால் உண்மையை அறியவும் வருங்காலத்தை உருவாக்கவும் முடியாதிருக்கிறது.

இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட பேராசிரியர் க. கைலாசபதியின் ஐந்தாவது ஆண்டு நினைவு ஆய்வரங்குத் தொடர் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய யாழ் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு சி பற்குணம் மேற்கண்டவாறு கூறினார்.

தலைவரின் உரையைத் தொடர்ந்து கவிஞர் இ முருகையன் கைலாசபதியின் விமர்சனக் கோட்பாடும், நடைமுறையும்' என்பது பற்றி உரையாற்றினர்.

சான்றோர் இலக்கியங்கள் அதாவது சங்ககால இலக்கியங்கள் தொடர்பாக பேராசிரியர் கைலாசபதியின் ஆக்கங்களை வாசிப்பவர்களில் சிலர் அவர் பழமையை ஏன் நேசித்தார் என்று எண்ணக் கூடும். ஆனால் அது உண்மையல்ல.

நவீன இலக்கியத்தையே அவர் காதலித்தார். சான்றோர் இலக்கியங்களையும், மேல் நாட்டுப் பல்மொழி இலக்கியங்களையும், தமிழ் எழுத்தாளர்களுக்கு ஒப்புவமை காட்டி நவீன இலக்கியமென்பது நம் வருங்கால வாழ்வுக்கு நல்வழி காட்டத் தக்கதாக இருக்க வேண்டும் என்பதனையே வலியுறுத்தினர்.

இப்படி அவர் கூறினார். (இ-09)

அனுமதி பெறாத

# மினி இறைச்சிக் கடைகளை

## தடுக்கக் கோரிக்கை

குருநகர், மார்ச் 9

திடீர் 'மினி' இறைச்சிக் கடைகளினால் தொற்று நோய்கள் பரவும் ஆபத்தும் அனுமதி பெற்ற தற்போது இயங்கும் இறைச்சிக் கடைகள் மூடப்படும் ஆபத்தும் உருவாகி வருகிறது.

யாழ் - மாவட்ட இறைச்சிக்கடை வியாபாரிகள் சங்கம் மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள அவசர வேண்டுகோள் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திடீர் 'மினி' இறைச்சிக்கடைகளை சந்திக்குச் சந்தியும், தெருவுக்குத் தெருவும் நிறுவ சனசமூக நிலையங்கள் போன்ற சில நிறுவனங்கள் கேள்வித் தொகைகள் பெற்று இடமளித்து வருவதாகவும் யாழ்-மாநகரசபை சுகாதாரப் பகுதி இதில் தலையிட்டு உடனடியாக இதனைத் தடுக்க வேண்டுமென்றும் யாழ் - மாவட்ட இறைச்சிக்கடை வியாபாரிகள் சங்கம் ஆணையாளரைக் கேட்டுக் கொண்டுள்ளது. (இ51)

### கண்காட்சி

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் புத்தகக் கண்காட்சி ஒன்று கல்லூரி அதிபர் திருமதி லீலா சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது.

கண்காட்சியை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா சப்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். (இ-118)

# மாணவர் அநாவசியமாக

## கைதாவதை தடுத்து நிறுத்துக!

### அமைதிப் படையிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 10

மாணவர்கள் அநாவசியமாகக் கைதாவதை தடுத்து நிறுத்துமாறு இந்திய அமைதிகாக்கும் படையினருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய மாணவர் நலன் காக்கும் அமைப்பு' இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேவையற்ற முறையில் மாணவர்கள் கைது செய்யப்படுவதால் அவர்களின் கல்வி பின்னடைகிறது.

தொடரும் காலகட்டத்தில் மாணவர்கள் தேவையற்ற விதத்தில் கைது செய்யப்படுவதும், தடுத்து வைக்கப்படுவது', தாக்கப்படுவதும் நிறுத்தப்பட வேண்டும்.

அத்துடன் அனைத்து மாணவர்களும் எவ்வேளையிலும் தமது கல்வி நிறுவன அடையாள அட்டையை வைத்திருப்பதன்மூலம் ஏற்படும் இடையூறுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இவ்வாறு மேலும் அந்த வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது' (இ-7)

## சமய சந்நிதிகளில்

### கும்பாபிஷேகம்

கொடிகாமம், மார்ச் 10

வித்தற் ளை சம்பா வெளி அருள்மிகு வீர கத்திப் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம் இம்மாதம் 23ஆம் திகதி புதன்கிழமை நடைபெற ஏற்பாடாயுள்ளது.

## களவுபோன பொருள்கள் மீட்பு

யாழ். செட்டித்தெருவில் உள்ள வீடொன்றில் கொள்ளையிடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டன.

இது பற்றி அறிய வருவதாவது;

நல்லூர் செட்டித்தெருவில் உள்ள பிரபல தொழில் அதிபர் ஒருவரது வீட்டில் அண்மையில் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டது.

இது பற்றி அமைதிப் படையினரிடம் முறையிடப்பட்டன.

இதனை அடுத்து இப்பொருள்கள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (இ-9)

## மினிபஸ் சேவைச்சங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

வடபிராந்திய மினி பஸ் சேவைச் சங்கத்தின் பஞ்சாய சபைக் கூட்டம் இன்று காலை 10மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் சகல பஞ்சாயத்து சபைகளினதும் தலைவர்கள், செயலாளர்கள் கலந்து கொள்வர். (இ-9)

## பேடன் பவல்சிறப்புகள்

வட்டுக்கோட்டை, மார்ச் 10

நீண்ட நாட்களுக்குப் பின் இன்று மிகச் சிறந்த கலைநிகழ்ச்சிகளை அதுவும் சாரணர் கொள்கைகளை - பேடன் பவலின் சிறப்புக்களை கண்டுகளிக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கலலூரியில் காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்கத்தினால் நடத்தப்பட்ட பேடன் பவல் தின விழாவில் பிரம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி (ஆங்கிலம்) திரு எஸ், குலசேகரம் மேற்கண்டவாறு கூறினார்

யாழ் மாவட்ட ஆணையாளர் திரு என்பேஜன் தலைமையில் விழா நடைபெற்றது

காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, மானிப்பாய் ஆகிய தொகுதி பாடசாலைசாரணர்குழுக்கள் விழாவில கலந்து கொண்டன.

இவ்விழாவை முன்னிட்டு பாடசாலை மட்டத்திலும், தொகுதிமட்டத்திலும் நடைபெற்ற பேச்சு, நாடகம், குழு நிகழ்ச்சிகளில் முதலிடம் பெற்ற சாரணர் குழுக்கள் இறுதிப் போட்டியில் கலந்து கொண்டன.

### கட்டாக்காலி நாய்களுக்கு சூடு

வேலணை, மார்ச் 10

வேலணை வங்களாவடிச் சந்தியில் உள்ள கட்டாக்காலி நாய்கள் அமைதிப் படையினரால் சுடப்பட்டு வருகின்றன. (இ-167)



பொய்யாமொழி

**குறள்:**

உரமொருவற்கு உள்ள வெறுக்கை அஃதில்லார்
மரம்மக்க ளாதலே வேறு.

**பொருள்:**

ஒருவனுக்கு வலிமையாவது ஊக்கம் மிகுதியே, அவ்வூக்கம் இல்லாதவ மரங்களே; (வடிவால்) மக்களைப் போல் இருத்தலே வேறுபாடு.

## செய்திக்கொத்து

### கிணற்றில் விழுந்து மரணம்

வேலணை, மார்ச் 10

கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்றவர் பிணமாக மீட்கப்பட்டார்.

வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகரஜா கம் பலவாணர் (வயது 42) என்பவரே இறந்தவர் ஆவார்.

தனது மகள் பிறந்த 31ஆம் நாள் வைபவத்துக்கு தனது உறவினர்களுக்கு சொல்லிவிட்டு, வீட்டிற்கு வந்து கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்றுராம்.

தண்ணீர் அள்ளும் பொழுது தவறி விழ்ந்து நீரில மூழ்கி மரணமானார். (இ-167)

### சிரமதானம்

கிளிநொச்சி அசம்பாவிதம் காரணமாக மூடப்பட்டிருந்த கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்தின் ஒரு பகுதிக் கட்டடம் இன்று, வளவும் சிரமதானம மூலம் செப்பனிடப்பட்டது.

பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் மட்டுமே இப்பணியில் ஈடுபட்டனர். (இ-67)

### விவரம் கோரப்படுகிறது

வேலணை. மார்ச் 10

படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் தங்கியிருப்போர் விவரங்களை உதவி அரசாங்க அதிபர் மூலம் கிராம சேவை அலுவலர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள் (இ-167)

சென் ஜோன்ஸ்

## 10 விக்கெட்டுகளால் வெற்றி

யாழ்ப்பாணம் மார்ச்10

யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கெதிரான கிரிக்கெட் போட்டியில் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 10 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது.

இந்த சினேக பூர்வ போட்டி கடந்த திங்கள், செவ்வாய் கிழமைகளில் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் சென் பற்றிக்ஸ் அணி 50 ஓட்டங்களை மட்டும் பெற்றது

ஏ. எம் நிமல்ராஜ், ஏ ஐ லொயலா ஆகியோர் தலா 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

ரி சஞ்சீவன், எஸ். உதயணன் ரி அகிலன், ரி சதீசன் ஆகியோர் முறையே 4, 3, 2, 1 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

முதல் நாள் ஆட்டத்தில் 7 விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றிருந்த சென் ஜோன்ஸ் அணி செவ்வாய்க் கிழமை தொடர்ந்து ஆடி 95 ஓட்டங்களுக்கு தனது முதல் இன்னிங்சை இழந்தது

என். ரகுராம் 39 ஓட்டங்களையும் ரி. சதீசன், ரி. சஞ்சீவன் ஆகியோர் தலா 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஓ. வி கே. எம். செந்தூரவாசன், செல்வராஜா ஏ. ஐ லொயலா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், வி ஆர் திலக்ராஜ் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்

சென் பற்றிக்ஸ் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 62 ஓட்டங்களைப் பெற்றது

வி ஆர். திலக்ராஜ் 22 ஓட்டங்களை பெற்றார்

ரி. சஞ்சீவன் 7 விக்கெட்டுகளையும் என். ரகுராம் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்

18 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ் அணி விக்கெட் இழப்பின்றி 20 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது

எஸ் என் புவனரெத்தினம், ஜி குகன் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 17, 3 ஓட்டங்களைப்பெற்றனர்

டி. எம். வேதபரணம், எஸ். விமலதாஸன் ஆகியோர் இந்தப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தனர். (ஓ-7)

தமிழ்நாடு

## இந்திரா காங்கிரஸ் உப தலைவர்களில் குமரி அனந்தன் ஒருவர்

சென்னை, மார்ச் 9

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சிக்குஐந்து உபதலைவர்களும் ஐந்து உதவிச்செயலாளர்களும் நியமிக்கப்பட்டனர்.

பிரதமர் ராஜீவ் காந்தி இந்த நியமனங்களைச் செய்தார்.

உபதலைவர்களில் ஒருவராக குமரி அனந்தனும் நியமிக்கப்பட்டார் இவர் முன்னர் தமிழ்நாடு காந்தி காங்கிரஸ் தலைவராக இருந்து தனியான கட்சி ஒன்றை நடத்தி வந்தார்.

உபசெயலாளர்களாக திண்டிவனம் ராமமூர்த்தி, திருமதி டி. யசோதா, தங்கபாலு, ரங்கராஜன் குமாரமங்கலம், பாலகிருஷ்ணன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

54 பேர் கொண்ட செயற்குழுவும் நியமிக்கப்பட்டது

இணை அமைச்சர்கள் சிதம்பரம், அருணாசலம், பிரபு ஆகியோர் செயற்குழுவில் இடம்பெறுபவர்களில் முக்கியமானவர்கள்.

புதிய செயற்குழுவின் முதலாவது கூட்டம் திருச்சியில் இம்மாதம் 13 ஆம் திகதிநடைபெறும் என்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார் தெரிவித்தார் (எ)

ஈராக் - ஈரான்

## ஏவுகணைத் தாக்குதல் 2ஆவது வாரமாகத் தொடருகின்றது

ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதலில் இருந்துதப்ப தெஹ்ரானில் இருந்து மக்கள் பெருமளவில் இடம்பெயரத்தொடங்கியிருக்கின்றனர்.

ஏவுகணைத் தாக்குதலில் ஏராளமான சிவிலியன்கள் உயிரிழந்தனர்.

இரண்டாவது வாரமாக இந்த ஏவுகணைத் தாக்குதல் இரண்டு நாடுகளுக்கு இடையே தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [எ]

ஈரானில் இருந்து

# இந்திய ராஜதந்திரிகள் திருப்பிஅழைக்கப்படுவர்

புதுடில்லி, மார்ச் 9

தெஹ்ரானில உள்ள இந்திய ராஜதந்திரிகளையும் அவர்களின் குடும்பத்தினரையும் திருப்பி அழைக்க இந்திய அரசு முடிவு செய்திருக்கின்றது.

வியாழன் முதல் அவர்கள் புதுடில்லிக்கு திரும்புவர்.

ஏவுகணை யுத்தம் ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையே தீவிரமடைந்து வருவதைத் தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டதாக இந்திய வெளியுறவு அமைச்சு தெரிவித்தது.

ஈராக் தலைநகரான பக்தாத்தில் உள்ள இந்திய ராஜதந்திரிகளைத் திருப்பிஅனுப்புவதுபற்றி முடிவு செய்யப்படவில்லை என்று வெளியுறவு அமைச்சு மேலும தெரிவித்தது. (எ)

## வெளி உலகில்

## திபெத்தில் சீன எதிர்ப்புக் கிளர்ச்சி

லாசா, மார்ச் 9

திபெத்தில் இடம் பெறும் சீன எதிர்ப்புக் கிளர்ச்சியை நடத்துபவர்கள், இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள தலாய் லாமா தலைமையிலான திபெத் அகதிகளே!

இப்படி சீன அரசு குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

இதுவரை நடந்த சீன எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் பிக்கு; நான்கு குடிமக்கள். மூன்று பொலிஸார்.

சீன எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஆயிரக்கணக்கான திபெத்தியர்கள் கலந்து கொண்டு வருகின்றனர். என்று ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

திபெத்துக்குச் சுதந்திரம் போன்ற கோஷங்களை அவர்கள் எழுப்பினர். [எ]

## மேனகா கட்சி ஜனதாவுடன் சங்கமம்

புதுடில்லி. மார்ச் 9

திருமதி மேனகா காந்தியின்சஞ்சய் மஞ்ச் கட்சி ஜனதா கட்சியுடன் இணைந்தது சஞ்சய் காந்தி விபத்தில் உயிரிழந்ததைத் தொடர்ந்து திருமதி மேனகா காந்தி 1982இல் புதிய கட்சியைத் தொடங்கினர்.

இரண்டு கட்சிகளும் இணையும் வைபவம் இம்மாதம் 12ஆம் திகதி உத்தரப்பிரதேசத்தில் அமைத்தி நகரில் நடைபெறவுள்ளது (எ)

## ரயில் விபத்தில் 141 பேர்பலி சீன அமைச்சர் ராஜினமா!

141 பேரைப் பலி கொண்ட மூன்று ரயில் விபத்துக்களைத் தொடர்ந்து சீனரயில்வே அமைச்சர் டிங் குவான்கென் தனது பதவியை ராஜினமா செய்தார்.

அவரின் இராஜினமா, அமைச்சரவையின் விசேட கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### தகவல் கொடுத்தவர் சுட்டுக் கொலை

டெல் அவிவ், மார்ச் 9

இஸ்ரவேல் பொலீஸாருடன் ஒத்துழைத்ததற்காக அரபு வாசிஒருவரை பலஸ்தீன கெரில்லாக்கள் சுட்டுக் கொன்றனர்

தகவல் கொடுத்த தற்காக தண்டிக்கப்பட்ட இரண்டாவது அரபுவாசி இவர் ஆவர் (எ)

### தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்

இரண்டு ஐரிஸ் தீவிரவாதிகள் ஜிப்ரால்டரில் கொல்லப்பட்டனர்

கவர்னர் மாளிகை முன்னால் கார்க் குண்டு ஒன்றை வைக்க ஐரிஷ் தீவிரவாதிகள் எடுத்த முயற்சியை பொலீஸார் முறியடித்தனர்.

அப்போது தீவிரவாதிகள் தப்பி ஓடினர் அவர்கள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இருவர் உயிரிழந்தனர் ஒருவர் தப்பி விட்டார். (எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்ஸ்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
* சகல விதமான றெடிமேட் ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை, யாழ்நகர்.

# உதயன்

10 - 03 - 1988 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
* மணிப்புரி
* பெனரஸ்
* காஞ்சிபுரம்
சேலைகளைப் பெற்றுக் கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.

## Accounts Trainees / Clerks

Walk - in - interview 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு. CHARTERED / I. C. M. A. மாணவர்கள் ஆங்கில தட்டெழுத்து அறிவு முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**TAXMAN**
கன்னாதிட்டிச் சந்தி,
யாழ்ப்பாணம். (1888)

## 10வது ஆண்டு நினைவு தினம்

திரு. சண்முகம் கனகரத்தினம்

தோற்றம்: 24 . 6 . 1921 மறைவு: 10 . 3 1978

ஆண்டுகள் பல சென்றாலும் ஒரு கணம் போல எண்ணத் தோன்றும் உங்கள் நினைவலைகள் எம்மை விட்டகலாது.

தங்களை அன்புடன் நினைவு கூரும்
மனைவி: மேர்சி லீலாவதியும்.
பிள்ளைகள் :- ஷிராணி விஜேநினி
வரலட்சுமி. வரதராஜன்,
பிரியதர்சன், ரவீந்திரகுமார்

சேவலய வீதி
சங்கானை.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 24 - 10 - 1918
உதிர்வு: 10 - 3 - 1982

வல்லிபுரம் பொன்னுத்துரை
(புகையிரத நிலைய அதிபர்)

தங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

வசந்தகிரி, மயிலிட்டி.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
[1864]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 01 - 08 - 1945
மறைவு: 10 - 03 - 1986

சின்னப்பு அலோசியஸ்

அன்பினால் பலர் உள்ளத்தை வென்றீர் அடக்கத்தால் பல நண்பரைப் பெற்றீர் பண்பினால் பலர் பாராட்ட வாழ்ந்தீர் பாசத்தின் இருப்பிடமாய், குடும்ப ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! அந்நிய தேசத்தில் கண பொழுதில் உமை இழந்தோம். ஈராண்டு மறைந்தாலும். உங்கள் இனிய நினைவுகளும் கனிவான பேச்சும் என்றும் எங்கள் இதயங்களில் மங்காமல் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சுகிறோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள். உற்றார்,
உறவினர்.

16/3 கச்சேரி, நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (2017)

### தமிழ்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விரதம் ஆரம்பமானது.

இப்போது அதுவும் பலனளிக்காததால் சாகும் வரை உண்ணா விரதம் ஆரம்பிக்கப்பட விருப்பதாக ஜி. தங்கவடிவேல், பி. கே. சபாநாதன், எம் காளிமுத்து ஏ. ஆர். குணசிங்கம் ஆகிய கைதிகள் அறிவித்திருக்கின்றனர். (எ)

### காணவில்லை



கார்த்திகேசு தம்பிமுத்து

பெயர்: கார்த்திகேசு தம்பிமுத்து வயது 70 20-10 87 இல் இருந்து காணவில்லை தகவல் தெரிந்தவர்கள் கீழ்க் காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்க.

விலாசம்:
திருமதி தம்பிமுத்து
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
[1836]

### 58 பேர் . .

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

குழுத் தலைவர்) கு. செல்வச்சந்திரன் [வல்வெட்டித்துறை தெற்கு பிரசைகள் குழுச் செயலாளர்] ஆகியோர் முன்நிலையில் இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.
[ஒ-160]

### யாழ். .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார முறைகளைப் பேணுவதன் மூலம் இந் நோய் பரவாமல் தடுக்க முடியும்.

எனவே சகல மக்களும் உயிர்க் கொல்லியாக இருக்கின்ற "பொலரா" என்னும் இந்தக் கொடிய நோயை நமது நகரத்தில் இருந்து விரட்டியடிக்க விரைந்து செயற்படுங்கள்

இவ்வாறு ஆணையாளர் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.
(ஒ-10)

### ஐ.தே.க---

(1ம் பக்கத் தொடர்ச்சி)


அவரும் அவரின் அமைச்சர்களும் விரும்புகின்றார்கள் இல்லை

மக்கள் முன் மறைப்பதற்கு அவர்களிடம் நிறைய உண்டு; இழப்பதற்கும் நிறைய உண்டு

சர்வசன வாக்கெடுப்பும் ஒரு தேர்தல் தான் பின்னர் ஏன் பொதுத் தேர்தலை நடத்தக் கூடாது"—

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார். [இ-எ]

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
திரு. நாகநாதன் குமாரசுவாமி J.P.
(யாழ் ஐக்கிய வியாபாரச்சங்க உதவி பொது முகாமையாளர்)

தோற்றம்: 25 - 07 - 1920 மறைவு: 09 - 03 - 1984

எம் குடும்பந்தனை ஒலிக்க வைத்த பெருந்தகையே! உங்கள் நலனை ஒறுத்து எம்மைக் சாந்த சுடர் ஒளியே, எம்மை எல்லாம் ஆளாக்கிய அருட் சுடரே, தம்மைத் தியாகம் செய்து எம்மை வளர்த்தெடுத்த கண்ணின் மணியே, எம்மை பேலோங்க வைத்த ஒளி விளக்கே, உங்கள் பொறுமைகளைச் சாதித்து பறுமையிலும் எங்களைக் கவர வைத்த கற்பகமே, இன்பம் பல அனுவித்து. எம்மையும் இன்பத்தில் வாழவைத்த ஆருயிரே, நொடிப்பொழுதும் தவறாது எம்மை ஆளாக்கத் துடிதுடித்த பெருந்தகையே, எம் ஆருயிரே. பார் எல்லாம் ஒன்று கூடினாலும் எங்கள் துயர் துடைத்து உங்கள் பிரிவை ஆற்ற முடியாது, எம் உயிரே நீங்கள் இறந்து 4 வருடங்கள் பூர்த்தியாகிய இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

"மகேசவாசம்"
கொடிகாமம்.
மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(1838)

## நீத்தார் பட்டியல்

### திரு. சி. விஜயானந்தன்

09.03 88 இல் நடைபெறவிருந்த திரு சி விஜயானந்தனின் இறுதிச் சடங்குகள் தவிர்க்க முடியாத காரணங்களின் நிமித்தம் 10.03.88 [இன்று] வியாழக்கிழமை காலை 10 00 மணிக்கு நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

தகவல்;
செ. பாலசிங்கம்

### திரு. சி. விஜயானந்தன்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டச் செயலாளரும், அரசியல் குழு உறுப்பினரும், தொழிற்சங்கப் பிரமுகருமான தோழர். சி.விஜயானந்தன் அகால மரணமடைந்துள்ளார் என்பதனை ஆழ்ந்த அனுதாபத்துடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 10 மணியளவில் (10 03. 88 வியாழன்) கந்தரோடை இல்லத்தில் நடைபெறும். [கட்சி உறுப்பினர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள். அனுதாபிகள் அனைவரையும் மரணச் சடங்கில் கலந்து கொள்ளுமாறு கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டக்குழு கேட்டுக் கொள்கிறது.]

க.நவரத்தினம்
யாழ். மாவட்ட அமைப்பாளர்

## 42 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 19 — 02 — 1970
இறைவன் அடியில் 29 — 01 — 1988

செல்வி துரைஐயா சிவரமணி

முந்தித் தவம் கிடந்து முன்னூறு நாட் சுமந்து அந்தி பகலாய் ஆரத்த பெற்றோரை மறந்து பாசமுடன் ஒன்றிணைந்த சகோதரரைப் பிரிந்து ஊரும் உறவும் போற்றும் உற்றாரை விட்டு ஆசையுடன் அன்புவைத்த அயலவரை துறந்து இன்பமுடன் இனிதுரைத்த தோழியரை மறந்து வாழ்வது மாயம் என்னும் தத்துவத்தை உணர்ந்து மண்ணுலகை விட்டு விண்ணுலகம் விரைந்துவிட்ட எம் செல்வியின் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகிறோம்

உன்பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணா,
தங்கைமார், உறவினர்கள்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி. (2014)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஏபிரகாம்பிள்ளை
புண்ணியபுவிராஜசிங்கி
(மன்னார் மாவட்டப் பாலநிலயப் பொறுப்பதிகாரியும் (D S), சத்துரிய மாசபை உறுப்பினரும் லயன்ஸ் கிளப் உறுப்பினரும்)

அன்னை மடியில் : 06 - 11 - 1914
இறைவனடியில் : 09 - 03 - 1985

எமது அன்புத் தெய்வமே!

எங்களைப் பிரிந்து இறைவனடி சென்றாலும் எங்கள் இதயங்களில் அணையாத தீபமாய் பிரகாசித்துக்கொண்டிருக்கிறீர்கள் 3 ஆண்டுகள் அல்ல மூவாயிரம் ஆண்டுகள் ஆனாலும் உங்கள் அன்பு ஒளி அணையாது உங்கள் ஆத்மா சாந்தியடைய எந்நாளும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்
சகோதரர்கள்.

திருமதி பு. சரஸ்வதி
வளர்மதி,
[illegible]
மானிப்பாய்.
SHAN ADVE (1881)

## நீத்தார் பட்டியல்

### திரு. நா. சண்முகலிங்கம்

(யாழ் மங்கையர்க்கரசி வித்தியாலய ஆசிரியர் சங்கீத பூஷணம்)

சங்கீத பூஷணம் 'லிங்கம் சகோதரர்' திரு R. N சண்முலிங்கம் காலமானார். இவர் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், காலம் சென்ற திரு நாகலிங்கம், கனகம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ் சென்ற சோமசுந்தரம், யோகம்மா ஆகியோரின் மருமகனும் ஆவார். ஸ்ரீரஞ்ஜனி. ஜனரஞ்ஜனி காலம் சென்ற சுமதி, பிரிதிவராஜ் (Holland) உஷா சாயிராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலலிங்கம் (ரஞ்சனஸ் விடியோ) அவரின் அன்பு மாமனும், ரஞ்சிதலிங்கம் (பரியோவான் கல்லூரி), கமலரஞ்ஜனி. ராஜரஞ்ஜனி ரஞ்சனா, ரஞ்சனலிங்கம், ராஜமுருகன் ஆகியோரின் அன்புப் பாட்டனும், முன்னாள் யாழ் இந்துக்கல்லூரி இசை ஆசிரியர் கனகலிங்கம், சதாசிவலிங்கம், நாகலட்சுமி, ராஜலிங்கம். காலம் சென்ற சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் வியாழக்கிழமை (10- 3- 88) பிற்பகல் 1 மணியளவில் 92. பழம் வீதி. கந்தர் மடம் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: N.K கமலலிங்கம் (கமல்)
(ரஞ்சனஸ் வீடியோ சென்றர்)
(2021)

### திருமதி சண்முகம் சிவபாக்கியம்

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த திருமதி சண்முகம் சிவபாக்கியம் 08- 03- 88 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு சிற்றம்பலம சண்முகம் (ஓய்வு பெற்ற பிரதம தபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் தங்கமுத்து. சிவகாம்பிகை காலஞ் சென்ற காந்திமதியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரி சிவதாசன் (உபதபாலதிபர் தெல்லிப்பளை மேற்கு) குகதாசன் (C. W E பருத்தித்துறை) தர்மதாசன் (ஆசிரியர் மயிலிட்டி Convent) ஜெயதாசன் (D I R அனுராதபுரம்) ஆகியோரின் அன்புத் தாயரும் குகதாசன் இளைப்பாறிய லிகிதர் C W. E.) சிவயோகலட்சுமிதேவி, கிருபாசகதி (ஆசிரியர் மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம்) சுலோஜனா ஆகியோரின் அன்பு மாமியும் மீரா விஜயகுமார் (அவுஸ்திரேலியா) தபோதினி. சிறிகரன் (குவைத்) மனோகரன் (வசி, வாச் வேக்ஸ்) கிருபாகரன் (உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் பாடசாலை) செளரி (உடுப்பிட்டி உயர்தர பெண்கள் பாடசாலை) காலஞ் சென்ற ஆரணி ஆகியோரின் அன்புப் பேத்தியும், யாழினி, யோகினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-3-88 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கொல்லங்கலட்டியில் நடைபெறும்.

தகவல்;
ஜெயதாசன்

கொல்லங்கலட்டி.
(1891)

### சுந்தரம் சிவநேசன்

கல்வளை சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவில் கிழக்கு வாசியும், முன்னாள் தேசிய வீடமைப்பு சபை உத்தியோகத்தரும், யாழ். நகை வியாபாரிகள் சங்கத் தலைவரும், A. K. S நகை மாளிகை முகாமையாளரும், கொக்குவில் மாத்தனை முருகன் கோயில் முகாமையாளரும், ஆகிய சுந்தரம் சிவநேசன் 8-3-88 அன்று காலமானார். இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், மாதுஸ்ரீ ரோணமணி, சிவனேஸ்வரி( France) காலஞ் சென்ற இராஜேஸ்வரி, சிவகுமாரன் (முன்னாள் Bank of Ceylon, Colombo) பத்மினி, வனிதா, சாவித்திரி (Newsland), தமயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற குமாரசாமி, கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர் மானிப்பாய்) காலஞ்சென்ற சுருமத விசாலாட்சி, பரமேஸ்வரி இராஜரட்ணம் (புன்னாலைக்கட்டுவன்), வன்னியசிங்கம் (விற்பனை திணைக்களம் யாழ் ) ஆகியோரின் சகோதரரும், சகாதேவன், யோகானந்தன் (France) முத்துக்குமாரசாமி (France) இராஜேந்திரா (நீர் வழங்கல் வடிகால் சபை யாழ்)மகேஸ்வரன் Newsland), தர்மலிங்கம் (Honey Tex, (Colombo), அமிர்தலிங்கம் (Lingam Silk House), ஆகியோரின் மாமனாரும், S. R. இராஜரட்ணம் (புன்னாலைக்கட்டுவன்) குணபாலசிங்கம் (பெருந்தெரு திணைக்களம் யாழ்.) ஆகியோரின் மைத்துனரும் ஆவர். அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
லிங்கம் சில்க் ஹவுஸ்
(2023)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 10-03-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Thursday, 10th March 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org